சுற்றறிக்கை இல. 1995/06

எனது இல. வஆ/ 1/2/90 (போதைப் பொருள்)
வழிகாட்டலுடன் ஆலோசனை வழங்கற்கிளை,
கல்வி உயர்கல்வி அமைச்சு
""இசுருபாய"", பத்தரமுல்ல.
1995.01.31

சகல பாடசாலை அதிபர்களுக்கும்,

## பாடசாலைகளுக்குள் புகைத்தல், மதுபானம் அருந்துலைத் தடைசெய்தல்

"" பாடசாலைகளுக்குள் புகைத்தல்"" என்பது தொடர்பாக அனுப்பப்பட்டுள்ள 1986.04.11 ஆந்திகதியிடப் பட்ட எனது இலக்கம் : க/ பாஇ/ 7/ 27 ஐயும் 1992.10.16 ஆந்திகதியிடப் பட்ட எனது இலக்கம் வ ஆ /1/2/90 ஐயும் கொண்ட சுற்றுநிருபங்கள் தொடர்பானது.

02. பாடசாலைகளில் புகைத்தல், மதுபானம் அருந்துதலைத்தடை செய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் அவ்வளவுக்கு வெற்றியளிக்கவில்லை என்பது தெரியவந்துள்ளது. அதனால், கீழே தரப்பட்ட அறிவுறுத்தல்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஆவன செய்யும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

01 ஆசிரியர்களோ, அன்றி வேறு ஆளணியினரோ அல்லது பாடசாலையைத் தரிசிக்கும் பெற்றார் பெரியவர்களோ பாடசாலை வளவுக்குள் இருந்து புகைப்பதோ அன்றி மதுபானம் அருந்துவதோ முற்றாகத் தடை செய்யப்படல் வேண்டும்.

02 சிகரட் அல்லது மதுபானம் பாடசாலை மாணவரைக் கொண்டு எடுப்பித்தல் முற்றுமுழுதாய்த் தடைசெய்யப்படல் வேண்டும்.

03 பாடசாலைப் போசனசாலையினுள்ளோ, அன்றி வளவுக்குள்ளோ சிகரெட்டோ அல்லது மது பானமோ விற்பனை செய்வது முற்றாகத் தடை செய்யப்படுதல் வேண்டும்.

04 பாடசாலை வளவுக்குள் வைபவவேளைகளில் புகைத்தலோ அல்லது மதுபானம் அருந்துதலோ முற்றாகத் தடைசெய்யப்படுதல் வேண்டும்.

05 பாடசாலை வளவுக்குள் புகைத்தலையும் மதுபானம் அருந்துவதையும் தடைசெய்தல் தொடர்பான பதாகைகள் விளம்பரப்பலகைகள் தொங்கவிடப் பட்டிருத்தல் வேண்டும்.

06 பாடசாலையிலோ அல்லது பாடசாலை வளவுக்குள்ளோ மாணவர்கள் அல்லது ஆசிரியர்கள் அல்லது பெரியவர்களோ பெற்றாரோ மற்றும் வேறு வெளியார்யாருமோ மதுபானம் போதைப்பொருள் கொணர்ந்தெடுத்தற்கு ஆயத்தமாவாராயின் உடனே அதனைத் தடுத்துநிறுத்த ஆவன செய்தல் வேண்டும்

03. தயவு செய்து அச்சுற்று நிருபத்தில் அடங்குவற்றை ஆசிரியர் குழாமுக்கும் எனைய சேவையினருக்கும் கட்டுப்பாட்டுடன் கவனத்தை ஈர்க்கும்படி அறிவுறுத்துக. புகைத்தல் / மது அருந்துதல் / தீங்கிழைக்கும் போதைவஸ்துக்கள் பாவித்தல் முதலானவை தொடர்பாக மாணவர்களுக்கும் பெற்றார்க்கும் அறிவுறுத்தல் வழங்குதல் தொடர்பான செயற்றிட்ட நிகழ்ச்சியினை நடைமுறைப்படுத்தற்கும் ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் நன்று.

ஒ / இ. எம். டீ. டீ. பீரிஸ்
செயலாளர்,
கல்வி, உயர்கல்வி அமைச்சு,

பிரதிகள் :

01. மாகாணக்கல்விச் செயலாளர்கள்.
02. மாகாணக்கல்விப் பணிப்பாளர்கள்.
03. கோட்டத்துக்குப்பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள்
04. செயலாளர், சுகாதார அமைச்சின் புகைத்தலும் சுகாதாரமும் தொடர்பான தேசிய ஆணைக்குழு
05. தலைவர், அபாயகரமான போதைப்பொருட்களின் கட்டுப்பாட்டு தேசிய சபை